நேசன் இதழ்கள்.

3-4

மார்ச், ஏப்ரல்,
1930

JL
Y31m2, N26
N30•5.3-4
144392

440 ɜd. No. M 2475. MARCH-APRIL, 1930. Vol. V—3-4.




# கிராம அபிவிருத்தி

## பாரஸ்ட்டு பஞ்சாயத்தார்கள் யூனியன் பத்திரிகை

ஆபீஸ்: மைலாப்பூர்: மதருஸ்:

... THE REGIST... 24 APR 1930 MADR...

பொருளடக்கம்.


| நெ. | | பக்கம். |
|---|---|---|
| 25. | பாரெஸ்டு பஞ்சாயத்து கமிட்டி. ... ... | 53 |
| 26. | பாரெஸ்டு பஞ்சாயத்துகள் ... ... ... | 55 |
| 27. | சமது உணவு — ... ... ... | 62 |
| 28. | இந்தியனுக்கு ஆரோக்கியமான உடையாது ? ... | 64 |


வருட சந்தா ரூ. 3.
தனிப்பிரதி அணு 6.

எடிடர் & மானேஜர்:
ஏ. சுவாமிநாதய்யர் பி. ஏ.

*ஆச்சரியமுள்ளது !* *அதிசயிக்கத்தக்கது ! !*

## தாது புஷ்டிக்குத் தங்க ரேக்கை

சித்தானந்த சிட்டுக்குருவி லேகியத்தில் சாப்பிடுங்கள்.

தாது புஷ்டிக்கு நிகரான வேறு மருந்து ஒன்றுமேயில்லை. இதை காலை மாலை நோய் பலம் போல் ஒன்றிரண்டு மண்டலம் உட்கொண்டால் வெகு சீக்கிரத்தில் வீரியத்தைக் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுமையும் திரும்பி வரும்படி செய்யும். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து பால்யம், யௌவனம், விருத்தாப்யம், இந்த பருவங்களில் அடைய வேண்டிய காலத்திற்கு முன் அடைந்த விபரீதங்களை நிவர்த்தி செய்யவும், கிழத்தனத்தை நீக்கி வல்லமை அடையச் செய்வதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. நீரழிவு, பிளவை, குன்மம், காசம், க்ஷயம், ஈளை, இருமல் கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு சூலை, கிரந்தி முதலிய சகல கர்ம வியாதிகளும் நீக்கும். பத்தியமில்லை. 100-நாளைக்கு தங்க ரேக்கும், சித்தானந்த சிட்டுக்குருவி லேகியமும் ரூபா 100. 50 நாளைக்கு ரூபா 50, 25 நாளைக்கு ரூபா 25. சிங்கப்பூர், பினாங்கு F. M. S. வாசிகள் சார்ஜு ரூபாய் 2 சேர்த்து முன்பணம் அனுப்பவும். அல்லது அட்வான்சு ரூபா 5 அனுப்பவும்.

காருண்ய கவர்மெண்டாரால் பரீக்ஷிக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும், தங்க வெள்ளி பதக்கங்களும் பரிசு பெற்றது.

## சித்தானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த அருமையான வீர தத்துவ லேகியத்தை உபயோகித்து இழந்த வீரிய தத்துவத்தையும், ஆண் சிங்கத்திற்கு ஒப்பான தேக பலத்தையும், மின்னாள் இன்பத்தையும், புருஷ கெம்பீரத்தையும், எழுவகை தாதுக்களின் திடத்தையும் உலக இல்லற வாழ்க்கையின் அநுகூலத்தையும் பெற வில்லை என்று ருஜுப்படுத்தும் கனவான்களுக்கு எங்கள் மருந்து சாலையிலிருந்து ரூபா 5000 வெகுமதி அளிக்கப்படும்.

மேலே சொல்லும் 5000. ரூபா வெகுமதிக்காக 14-8-20-ல் எங்கள் பேரால் கிரயமானதும், தற்காலம் ரூபா பதினாயிரம் மதிப்புள்ளதும், கவர்மெண்டின் சட்டப் படி 10 ரூபா ஸ்டாம்பின் பேரில் எழுதி சர்க்கார் டாக்ளாத்தில் 933-குழி விஸ்தீரண நஞ்சை வகைராக்களை 20-9-20-ல் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட சொத்தை ஜாமீனாக வைத்து இருக்கிறோம். ஆனதால், கனவான்களே ! சித்தானந்த சிட்டுக்குருவி லேகியத்தை ஒரு முறை பரிசோதித்துப் பாருங்கள்.

ஜெயம் பெறுவீர்கள் ! உள்ளபடி ஜெயம் பெறுவீர்கள் ! !

இதன் கிரயம் [எவ்வித பத்தியமுமில்லை.]

96 வேளை 48 நாள் லேகிய டப்பி விலை ரூபா ... ... 15-0-0.
48 வேளை 24 நாள் லேகிய டப்பி 1-க்கு ரூபா ... ... 8-0-0.
24 வேளை 12 நாள் லேகிய டப்பி 1-க்கு ரூபா ... ... 4-4-0.

சவுத் ஆப்ரிக்கா, டிரான்சிவால், சுமத்ரா, ஜாவா, சிலப்பீஸ், கொச்சின், சீனா, பிஜி முதலிய வெளி நாட்டு ஆர்டர்கள் பார்சல் செலவுக்கு ரூபா 2 சேர்த்து முன் பணம் அனுப்பவும்.

## தாமரை லிங்கத் தைலம்.

கனவான்களே ! இந்த அருமையான தைலத்தை மூன்று தடவை போதுமளவு எடுத்து தளர்ந்து சோர்வடைந்த கருவிகளின் மீது தேய்த்த உடன் தாங்கள் இதுவரை பாராத ஆச்சரியத்தை தரும்படியான கருவிகளைப் பெருகச் செய்து நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாகு மென்பது நிச்சயம்.

1 அவுன்ஸ் தகர பாட்டில் விலை ரூ. 1 வி. பி. பாக்கிங் செலவு பிரத்தியேகம்.

எங்கள் விலாசம்:— **ஸாஹேபியா மருந்துசாலை,**
நெ. 146, பிராட்வே, சென்னை.

ஆர்டர் செய்யும்போது பத்திரிகை பேரைக் குறிப்பிடவும். கேட்லாக் இனாம்.

நேர்த்தியான காகிதத்தில் குறைந்த சந்தாவில்

நல்ல பத்திரிகை! நவீன பத்திரிகை!!

## " தமிழ் நாட்டு மாடேர்ன் ரெவியூ."

என்று பல பத்திரிகைகளாலும் அறிஞர்களாலும்

புகழ்ப் பெற்ற உயர்ந்த மாதப் பத்திரிகை!!!

## "பாரதி"

ஆசிரியர்:— ரா. நாராயணஸ்வாமி அவர்கள்.

வருட சந்தா ரூ 2. அயல் நாடுகளுக்கு ரூ 2-8-0 அல்லது 4 ஷிலிங்.

மானேஜர், "பாரதி" ஆலயம்,

உத்தம பாளையம், தென்னிந்தியா.

---

## கலைமகள்

(ஓர் இனிய செந்தமிழ் மாதப் பத்திரிகை)

அன்பின் மிக்க சகோதர சகோதரிகாள்!

தேச நலத்தையும், மதாபிவிருத்தியையும், பாஷாபிமானத்தையும் கருதியுழைக்கும் தேசீய மணம் கமழும் சிறந்த மாதப் பத்திரிகை இதுவொன்றே.

சந்தா விபரம்: ஒரு வருடத்திற்கு தபாற் செலவுடன் இந்தியா, பர்மா சிலோன் முதலிய விடங்கட்கு அணா-12. பினாங்கு, சிங்கப்பூர் முதலிய விடங்கட்கு ரூ 1. தனிக்காப்பி 1-க்கு அணா 0-1-6.

மானேஜர்:- "கலைமகள்" ஆபீஸ்,

64, முள்ளாசாயபு வீதி, சௌகார்பேட்டை, சென்னை.

---

## கம்ம பாலன்.

பிரதி தமிழ் மாதக் கடைசியில் வெளி வரும் சிறந்த தமிழ்ப் பத்திரிகை. பத்திராதிபர்:— ஸ்ரீ ஆர். வேங்கடசாமி நாயுடு: வருட சந்தா தபாற் செலவுட்பட ரூபா ஒன்றுதான். விளம்பர விகிதத்திற்கு மானேஜருக் கெழுதுங்கள். மாதிரிக்காப்பி இலவசம். இன்றே எழுதுக. மானேஜர், கம்ம பாலன். ஆபீஸ்: திருத்தங்கல் Po. இராமநாதபுரம் ஜில்லா. (Ramnad Dist)

---

## இந்திய விவசாயம்

ஏழாவது வருடம் நடக்கிறது.

பயிரிடும் முறை, கால்நடை பரிபாலனம், கூட்டுறவு, கிருஷிகர் செய்யக் கூடிய சிறு தொழில்கள், முற்போக்கான விவசாய முறைகள் முதலிய பல விஷயங்களைக் கொண்டு வெளிவரும் ஓர் தமிழ்ப் பத்திரிகை.

மானேஜர், இந்திய விவசாயம் ஆபீஸ்;

தெப்பக்குளம் போஸ்ட்; திருச்சிராப்பள்ளி.



REGISTRAR

# SADHANA AUSADHALAYA

## DACCA (Bengal)

—ADHYAKHA—

**Joges Chandra Ghose,** M. A. F. C. S. (London)

*Formerly Professor of Chemistry, Bhagalpur College.*

மிகவும் சுத்தமான ஆயுர்வேத ஔஷதங்கள் கிடைக்கும். வேண்டுவோருக்கு விலைப்பட்டி இனாமாக அனுப்பப் படும். வியாதியின் விவரத்தைத் தெரிவித்தால் இனாமாக மருந்து பட்டி அனுப்பப் படும்.

மகரத்வஜம். (சுவர்ணஸிந்தூரம்.)

அசல் தங்கத்துடன் ஒரு சேர் ... ரூ 4 0 0.

இது எல்லா வியாதிகளுக்கும் கைகண்ட மருந்து: பித்தம், வாதம் முதலிய வியாதிகளைப் போக்குவதுடன் ரத்த சுத்திக்கும் ஏற்றது.

சரிபாடி ஸாஸா.

இது மூல ரோக ஸம்பந்தமான வியாதிகளுக்கெல்லாம் ஸரியான மருந்து.

விலை ஒருசேர் ரூ 3 0 0

சுக்ர ஸஞ்சீவி.

இது வீர்யக் குறைவு, அபோகத் தன்மை, சுவப்னஸ்கலிதம் முதலிய வியாதிகளுக்கு அமிர்தம் போன்ற மருந்து.

விலை சேர் 1க்கு ரூ 16 0 0.

அபல பந்தப ஜகா.

இது ஸ்திரீகளுக்கு உண்டாகும் இடுப்பு நோய், முதுகு வலி கர்பப்பை வியாதி, அகாலமா...ய் முதலிய கொடும் வியாதிகளைப் போக்கும்.

16 டோஸ் ரூ 2 ... 50 டோஸ் ரூ 5.


199392


## 1895-ம் வருஷம் ஸ்தாபிக்கப் பட்டது

## பழமையான கரூர் ரத்ன வியாபாரிகள்.

நாம் வைரங்கள் முதலியன விற்கும் போதே "காரண்டீ" செய்கிறோம். இஷ்டமிராவிடில் சரக்குகளை மாற்றிக்கொள்ளவாவது திருப்பி பணம் பெற்றுக்கொள்ளவாவது செய்யலாம்.

எங்களுடைய உத்திரவாதமே உங்களுக்கு ஒரு பொறுப்பாகும். நீங்கள் நம்மிடம் தபால் மூலமாகவும் வியாபாரம் செய்யலாம்.

நம்முடைய வெள்ளி தினுசுகள் சுத்த வெள்ளியினால் கையினால் செய்யப்பட்டவை. அவைகள் கனமாகவும், கண்ணியமாகவும் நூதன தினுசுகளாகவுமிருக்கும்.

இந்த வியாபாரத்தில் எங்களுக்கு 35 வருஷங்களுக்கு மேல் நல்ல அநுபவமுண்டு.

ஆதலால் நம்முடைய அநுபவத்தால் நீங்கள் லாபமடைய இதுவே நல்ல தருணம்.

**ஸூராஜ்மல் லல்லுபாய் அண்டு கோ,**

வைர, ரத்ன, வெள்ளி தங்க வியாபாரிகள்.

313, எஸ்பிளனேட். மதராஸ்.

# கிராம அபிவிருத்தி (ரூரல் இந்தியா) பஞ்சாங்கம்

| ஏப்ரல் மேயீ | சித்தி வைரமீ | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | விசேஷங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 13 | 1 | ஞா | ○ பௌள 15 | சித் 45 | சி | புது கணக்குபோட |
| 14 | 2 | தி | பிர 12-47 | சுவா 45 | அ-ம | |
| 15 | 3 | செ | துதி 11-41 | விசா 46 | ம-சி | |
| 16 | 4 | பு | திர 11-54 | அனு 49 | சி | வாகனம் மாற்ற |
| 17 | 5 | வி | சது 13-26 | கேட் 53 | சி | |
| 18 | 6 | வெ | பஞ் 16-7 | மூல 57 | அ-சி | |
| 19 | 7 | ச | சஷ் 19-52 | பூரா 60 | சி | |
| 20 | 8 | ஞா | சப் 24-28 | பூரா 4 | சி-அ | தோட்ட வேலை செய்ய |
| 21 | 9 | தி | அஷ் 29-26 | உத் 9 | ம-அ | களஞ்சியம் போட |
| 22 | 10 | செ | நவ 34-27 | திரு 16 | சி | |
| 23 | 11 | பு | தச 39-9 | அவி 22 | ம-சி | |
| 24 | 12 | வி | ஏகா 43-10 | சத 28 | ம-சி | |
| 25 | 13 | வெ | துவா 46-12 | பூரட் 33 | சி | |
| 26 | 14 | ச | திர 48-4 | உத்தி 36 | சி-ம | காலை-விதைக்க |
| 27 | 15 | ஞா | சது 48-38 | ரேவ 39 | அ-சி | |
| 28 | 16 | தி | ● அமா 48 | அசு 40 | சி | மாடு வாங்க |
| 29 | 17 | செ | பிர 46-49 | பர 40 | சி | |
| 30 | 18 | பு | துதி 42-59 | கார் 39 | அசி- | கடன் நீக்க |
| 1 | 19 | வி | திர 39 | ரோக 37 | ம | |
| 2 | 20 | வெ | சது 34-15 | மிரு 34 | சி | |
| 3 | 21 | ச | பஞ் 28-53 | திருவா 30 | சி | சூளை நெருப்பிட |
| 4 | 22 | ஞா | சஷ் 23-8 | புன 27 | சி | |
| 5 | 23 | தி | சப் 17–10 | பூச 23 | சி | |
| 6 | 24 | செ | அஷ் 11-9 | ஆயி 18 | சி | |
| 7 | 25 | பு | நவ 5-15 | மக 15 | சி-அ | கிணறு கட்ட |
| 8 | 26 | வி | ஏகா 54-41 | பூர 11 | சி-ம | |
| 9 | 27 | வெ | துவா 50-40 | உத்திர 8 | சி-அ | |
| 10 | 28 | ச | திர 48-4 | ஹஸ் 6 | ம | |
| 11 | 29 | ஞா | சது 44-47 | சித் 5 | சி | |
| 12 | 30 | தி | ○ பௌள 44 | சுவா 5 | அ-ம | பசு கட்ட |
| 13 | 31 | செ | பிர 43-44 | விசா 6 | ம-சி | |

## இராகுகாலம் முதலியன.

[சூரியன் உதயம் 6 மணிக்கு ஆகும் நாட்களுக்கு]

| வாரங்கள் | இராகு காலம் | குளிகை காலம் | எமகண்டம். |
|---|---|---|---|
| ஞாயிறு | மாலை 4½—6 | மாலை 3—4½ | மாலை 12—1½ |
| திங்கள் | காலை 7½—9 | மாலை 1½—3 | காலை 10½—12 |
| செவ்வாய் | மாலை 3—4½ | மாலை 12—1½ | காலை 9—10½ |
| புதன் | மாலை 12—1½ | காலை 10½—12 | காலை 7½—9 |
| வியாழன் | மாலை 1½—3 | காலை 9—10½ | காலை 6—7½ |
| வெள்ளி | காலை 10½—12 | மாலை 7½—9 | மாலை 3—4½ |
| சனி | காலை 9—10½ | காலை 6—7½ | மாலை 1½—3 |


## தி யுனைடெட் நாஷனல் இன்ஷியூரன்ஸ் கம்பெனி லிமிடெட்:

தலைமை ஆபீசு: கராச்சி.

நீங்கள் பால்யமானால்,

உங்களுக்குத் தகுதியான வேலை நம்மிடம் கிடைக்கும்.

நீங்கள் வயோதிகரானால்,

நம்மிட கம்பெனியின் ஏஜெண்டாக நீங்கள் வேலை செய்யலாம். அப்படிச் செய்தால் உங்களுக்குத் தக்க ப்ரதி பலன் கிடைப்பதோடு, உங்களுக்கு அது மெத்த திருப்தியையும், சந்தோஷத்தையும் கொடுக்கும்.

அரையணா சிலவு செய்து முழு விவரம் கேளுங்கள்.

நாம் கொடுப்பவை:—

(1) குறைந்த சிலவில் புதுமையான பாலிஸிகள்.
(2) வயதானவர்களுக்குத் தக்க வருமானம்.
(3) வெளியில் நமது ஏஜண்டாக வேலை செய்பவர்களுக்குள் ஒருவருக்கு நமது கம்பெனியின் மேல்பார்வை கமிட்டியில் ஒரு ஸ்தானம்.

மற்ற விவரங்கட்கு விலாஸம்:—

மானேஜிங் ஏஜண்டுகள்,
யுனைடெட் நாஷனல் இன்ஷூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்,
ட்ரீடீ ரோட், கராச்சி.

### சுகாதார பாடங்கள்.

I, II, III வது பாரங்களுக்கு (விலை முறையே, 6 அணா, 4 அணா, 6 அணா) வீரவநல்லூர், ஸெகண்டரி பாடசாலை ஆசிரியர் எம். எஸ். சுப்பிரமணியன் எழுதியவை.

தமிழ்நாடு "சிறு சிறு பாடங்களாக பல படங்களுடன் ஆசிரியர் சுகாதார முறைகளைத் தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கிறார்"

ஆரோக்கிய தீபிகை "சுலப நடையில் சிறுவர்கள் எளிதில் தெரிந்து கொள்ளும் படி எழுதப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு எலிமெண்டரி பாடசாலைகளிலும் இவைகளைப் பாடப் புத்தகங்களாக வைப்பார்களென்று நம்புகிறோம்".

ஊழியன் "பள்ளி மாணவர் மட்டுமன்று; பிறரும் படித்துப் பெரும பயனடையத் தக்கவை".

புத்தகங்கள் ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

மைலாப்பூர், மாரி செட்டி வீதி 4 நெ வீடு. K. S. M. சர்பா விடமும் கிடைக்கும்.



ரப்பர் ஸ்டாம்புகள்.

பதக்கங்கள் பரிசு பெற்றவை

மதராஸ் ரப்பர் ஸ்டாம்பு கம்பெனி,

தபால் பெட்டி 74. மதராஸ்.



RUBBER-STAMPS

— AWARDED MEDALS —

LOWEST PRICES — BEST QUALITY

SATISFACTION GUARANTEED

OR YOUR MONEY BACK.

CATALOGUE free.

The Madras Rubber Stamp Mfg. Co.

POST BOX 74, MADRAS.



రబ్బరు స్టాంపులు.

நல்ல தருணம்! **அறிக்கை** தக்க சமயம்!!

பாரெஸ்டு பஞ்சாயத்து பிரஸிடெண்டுகளுக்கு அவசியமாக வேண்டிய கீழ்க்கண்ட ரசீது புத்தகங்கள் வெகு நேர்த்தியாகவும், சுத்தமாகவும் அச்சிட்டு, குறைந்த விலைக்கு நம்மிடம் தயாராக இருக்கின்றன.

**விவரம்.**

| | | |
|---|---|---|
| 1. | குற்ற ரிபோர்ட்டு (ரூ 2) | (Offence Report) |
| 2, | மேய்ச்சல் உத்திரவுச் சீட்டு (ரூ 1) | (Cattle Permit Pass Book) |
| 3. | எருத்தழை பாஸ் (அணா 12) | (Green Leaves and Manure Pass Book) |
| 4. | உலர்ந்த சுள்ளி, குண்டுக்கல் பாஸ் (அணா 12) | (Dead wood, Quarrying etc., Pass Book) |
| 5. | மாதாந்திர ரிபோர்ட்டு 100 பாரம் (ரூ 1) | (Monthly Report 100 forms) |

Note :—மேல் கண்ட (5 வது தவிர) ஒவ்வொரு புத்தகங்களும் ஒரிஜினல், டூப்ளிகேட்டுடன் 100 ஏடுகள் நெம்பரிட்டு சுத்தமாக பயிண்டு செய்யப் பட்டுள்ளன. ஒன்ருக வாங்கினல்

இவை ஐர்தும் ரூ 5--0--0 தான்.

தபால் சார்ஜு வேறு (ரூ 1—0—0).

முன் பணம் கீழ்கண்ட விலாஸத்திற்கு அனுப்பியாவது வி. பி. (V. P) மூலமாகவாவது பெற்றுக் கொள்ளலாம்.

Manager,

The Magazine Press;

Chingleput. S. I. Ry.

மானேஜர்,

மாகஸீன் அச்சுக்கூடம்,

செங்கற்பட்டே.


# ரூரல் இந்தியா


(பாரெஸ்டு பஞ்சாயத்து பத்திரிகை.)

எடிடர், மானேஜர்—எ. ஸ்வாமிநாதய்யர், ரிடயர்ட் டிப்டி கலெக்டர்.

ஆபீஸ் : மைலாப்பூர், மதராஸ்.

வால்யூம் V. 1930ஞு மார்ச்சு—ஏப்ரல். நெ. 3-4.


## பாரெஸ்டு பஞ்சாயத்து கமிட்டி.

பாரெஸ்டு பஞ்சாயத்துகள் வேலை செய்ய வேண்டிய வழியில் எவ்விதிகளை அவைகள் அநுசரிக்க வேண்டுமோ அவைகளைக் குறிப்பிட்டு நிர்ணயிப்பதற்காக கவர்மெண்டார் ஒரு கமிட்டியை ஏற்படுத்தினர்கள் என்கிற விஷயம் சந்தா நேயர்களுக்கு ஒரு துண்டுப் பிரகடனத்தின் மூலமாகவும், நமது பிப்ரவரி மாதச் சஞ்சிகையின் முதல் கட்டுரையின் மூலமாகவும், தெரிவிக்கப் பட்டது. மேற் கூறிய கவர்மெண்டு கமிட்டியானது நாலு தடவை கூடி தன் வேலையை முடித்து விட்டது. கமிட்டி செய்திருக்கிற விதிகள் பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் அபிவிருத்திக்குச் சாதகமாகவே இருக்கக் கூடுமென்று நம்புகிறோம். கமிட்டியின் தீர்மானங்கள் கவர்மெண்டாரின் அங்கீகாரத்திற்கு அநுப்பப் பட்டிருக்க வேண்டும். கவர்மெண்டார் அவைகளைப் பற்றி ஆலோசித்து உத்திரவுகளைச் சீக்கிரம் வெளியிடுவார்கள்.

பாரெஸ்டு பஞ்சாயத்து சங்கத்தார் அநுப்பிய துண்டுப் பிரகடனத்தின் சம்பந்தமாக பல பஞ்சாயத்துகள் குறைகளையும், அபிவிருத்தி, யோசனைகளையும் தெரிவித்தன. இவைகளைப் பற்றி கவர்மெண்டாருடன் வாதிக்கத் தொடங்கி யிருக்கிறோம். 500, 600 பஞ்சாயத்துகளிலிருந்து அப்பிரகடனத்தின் சம்பந்தமாக குறைப் பத்திரங்கள் இன்னும் வரவில்லை. அவைகள் அப் பத்திரங்களைச் சீக்கிரம் நமக்கு அனுப்பிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். நமது பத்திரிகையில் அவைகளைப் பிரசுரம் செய்து வாதித்து வர ஆரம்பித்திருக்கிறோம்.

சட்ட சபையில் மார்ச்சு மாத மீட்டிங்கில் வரவு செலவு திட்டங்கள் ஆலோசிக்கப் பட்ட பொழுது பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளின் சம்பந்தமாக விவாதம் நடந்தது. பாரெஸ்டு பஞ்சாயத்துகளுக்குப். பல குறைகள் இருக்கின்றனவென்றே ஸ்தாபிக்கப் பட்டது.

பஞ்சாயத்துகளுக்கு அஸ்ஸெஸ்மெண்டு சம்பந்தமாகவும், கம்பவுண்டிங்கு அதிகாரம், பணம் இவை சம்பந்தமாகவும், காடுகளில் குட்டை, கிணறுகள் இல்லாமலிருக்கிற அசௌகரிய சம்பந்தமாகவும் காடுகளில் தர்காஸ்து முதலியவைகள் கொடுக்கப் படுகிற அசௌகரிய சம்பந்தமாகவும், அபிவிருத்தி முயர்ச்சிகளுக்கும், நிர்வாஹ செலவுகளுக்கும் பணம் போதாமலிருக்கிற அசௌகரிய சம்பந்தமாகவும் பல குறைகளிருக்கின்றன.

கவர்மெண்டார் ஸ்டாண்டிங்கு ஆர்டரை நிர்ணயித்த பின்பு பல குறைகள் தீராமலே இருக்கும். கவர்மெண்டாரும் பஞ்சாயத்தார்கள் தங்களுடைய குறைகளைத் தங்களுக்குத் தீவிரமாய்த் தெரிவிக்க வேண்டுமென்றே கோரு

கிறார்கள். நமது பத்திரிகையானது முக்கியமாக இந்த ஊழியத்திற்காகவே இருந்து வருகிறது. பஞ்சாயத்தார்கள் இனியாவது தங்களுடைய குறைகளைத் தெரிவித்து எழுத வேண்டும் என்று வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

பத்திரிகையில் எழுதுவது தவிர, பஞ்சாயத்தார்கள் ஜில்லா மகா நாடுகளையும், மாஹாண கான்பரன்ஸையும் பிரதி வருஷமும் கூட்டி, குறைகளின் சம்பந்தமாகத் தீர்மானங்களைக் கைக்கொண்டு கவர்மெண்டாருக்குத் தெரிவிக்க வேண்டும். ஆகவே, வெகு சீக்கிரத்தில் சென்னையில் ஒரு மாஹாணக் கான்பரன்ஸை நடத்த உத்தேசித்திருக்கிறது. தலைவர்கள் சென்னை கவர்னர் அவர்களை அக்கான்பரன்ஸை திறக்கும்படி வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளப் போகிறார்களாம். ரெவினியூ மெம்பர் அவர்களையும் அதற்கு அக்ராஸனம் வஹிக்கும்படி கேட்டுக் கொள்ளுவார்கள். உத்தேசிக்கப் பட்டிருக்கிற மாஹாணக் கான்பரன்சு வெகு முக்கியமான கான்பரன்சாகையால் ஒவ்வொரு பஞ்சாயத்தும் தவராமல் அதற்குப் பிரதிநிதிகளை அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். 1200 பஞ்சாயத்துகளும் ஒன்று கூடத் தவராமல் ஒவ்வொன்றுக்கு ஒரு பிரதிநிதியை யனுப்ப வேண்டும். கான்பரன்சின் தேதியும் மற்ற விவரங்களும் பின்பு விவரிக்கப் படும். சென்னை பாரெஸ்டு பஞ்சாயத்தார் யூனியனின் பிரஸிடெண்டும் டைரெக்டர்களும் கான்பரன்சு தேதிக்கு முன்னதாகவே ஒரு ஜனரல் மீட்டிங்கைக் கூட்டி அதில் தங்களுடைய வரவு சிலவு கணக்கை விவரிக்கப் போகிறார்களாம். மேற்கூறிய கணக்குகள் முன்னதாக ஒரு திறமையுள்ள அதிகாரப் பட்டம் பெற்ற ஆடிடரால் பரிசோதிக்கப் படும்.

யூனியன் இனி எவ்விதமாக நடைபெற வேண்டு மென்பது மேற்கூறிய கான்பரன்ஸால்தான் நிர்ணயிக்கப்பட வேண்டுமாதலால், பிரதி பஞ்சாயத்தும் தவராமல் அதற்குப் பிரதிநிதிகளை அனுப்ப வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

கவர்மெண்டாரும், ரெவினியூ போர்டாரும் தங்களுடைய பிரதிநிதிகளைக் கான்பரன்சிற்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். போர்ட்டார் பஞ்சாயத்து ஆபீஸர் அவர்களையும், டிப்டி தாசில்தார்களையும் கான்பரன்சிற்கு வரும்படி உத்திரவிட வேண்டு மென்றும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

கான்பரன்சுக்காக முயற்சிகள் இப்பொழுதே, காலதாமஸமில்லாமல், எடுத்துக் கொள்ளப்பட வேண்டியிருப்பதால் சிலவுகளுக்குப் பணம் உடனே தேவையாக விருக்கிறது. நடக்கப் போகிற கான்பரன்சு வெகு முக்கியமான கான்பரன்சாகையால் அதற்கு 600, 700 நபர்களுக்குக் குறையாமல் பிரதிநிதிகள் வருவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. முன் கான்பரன்சுகளைக் காட்டிலும் இக்கான்பரன்ஸில் அதிகச் சிலவுகள் ஏற்படும். ஆகவே, ஒவ்வொரு பஞ்சாயத்தும் தவராமல் கான்பரன்சுக்காக டொனேஷனை உடனே அனுப்ப வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறோம். அநேக பஞ்சாயத்துகள் ஏழைப் பஞ்சாயத்துகளாக விருக்கிறபடியால் பணமுள்ள பஞ்சாயத்துகள் கூடிய மட்டும தாராளமாகவே பணம் அனுப்ப வேண்டு மென்று கேட்டுக் கொள்வோம். டொனேஷன்கள் அடியில் கண்ட விலாஸத்திற்கு அனுப்பப் பட வேண்டும்.

ம-ா-ா-ஸ்ரீ ஏ. இராஜகோபால் ரெட்டிகாரு,
பிரஸிடெண்டு, சென்னை பாரெஸ்டு பஞ்சாயத்தார் யூனியன் லிமிடெட்,
பாலவாக்கம், ஊத்துக்கோட்டை போஸ்டு, செங்கல்பட்டு ஜில்லா.



# பாரெஸ்டு பஞ்சாயத்துகள்.

## I

1912-ம் வருஷத்தில் கவர்மெண்டார் சட்டசபை விவாதத்திற்கிணங்கி பாரெஸ்டுகளில், மேய்ச்சல், விரகு, எருத்தழை சம்பந்தமாக கிராம ஜனங்களுக்கு இருந்த கஷ்டங்களை ஆராய்ந்து விசாரணை செய்யும்படி ஒரு கமிட்டியை ஏற்படுத்தினார்கள். அக் கமிட்டிக்கு மிஸ்டர் டிப்ளியூ. ஓ. ஹார்ன், ஸி. எஸ். ஐ. அக்ராஸனராக நியமிக்கப் பட்டார். கமிட்டியில் திவான் பஹதூர் பி. கேசவ பிள்ளை, ஸி. ஐ. ஈ. அவர்களும், திவான் பஹதூர் எம். இராமசந்திரராவ் அவர்களும் அங்கத்தினர்களாக இருந்தார்கள். மேற்கூறிய கமிட்டியார் விசாரணைகளை நடத்திய பின் பாரெஸ்டு இலாகாவின் சிப்பந்திகள் மேற் கூறிய வகைகளில் கிராம ஜனங்களின் சௌகரியங்களிற்கேற்றபடி ஒத்துழைக்க வில்லை யென்ற தீர்மானத்தை யடைந்தார்கள்.

1890 ஹுல் கவர்மெண்டார் தங்களுடைய பாரெஸ்டு சம்பந்தமான நோக்கங்களை வெளியிட்டார்கள். அவர்கள் சொன்னதாவது: "தேசம் முழுவதும் ரிஸர்வு பாரெஸ்டுகள் இருப்பது மேய்ச்சல், விரகு, எருத்தழை விவஸாயக் கருவிகளுக்கு வேண்டிய மரக்கட்டைகள், கொம்புகள் இவைகள் சம்பந்தமாக கிராம ஜனங்களுக்குச் சௌகரியங்களை யுண்டாக்குவதுதான். மலைகளின் மேல் உள்ள காடுகளை கட்டிட வேலைகளுக்கும் மரசாமான் வேலைகளுக்கும் வேண்டிய விருக்ஷங்களை வளர்ப்பதில் அமைக்க வேண்டும்; சமபூமிகளில் உள்ளவைகளை மேய்ச்சல், விரகு சௌகரியங்களுக்காக அமைக்க வேண்டும்." 1894 ஹுல் மேற் கூறிய நோக்கங்கள் ஒரு கவர்மெண்டு பிரகடனத்தில் வற்புறுத்தப் பட்டன. மேலும், பாரெஸ்டு டிபார்ட்டுமெண்டார் கிராமக் காடுகளின் சம்பந்தமாக அதிகக் கடுமையான முறைகளை அநுஸரிக்கக் கூடாதென்றும் கவர்மெண்டாரால் மொழியப் பட்டது.

பாரெஸ்டு கமிட்டியார் விசாரணைகளைச் செய்ததில் மேற் கூறிய நோக்கங்கள் பயன் படவே யில்லை யென்றே ஏற்பட்டது. காட்டு இலாகாவானது அது கிராமக் காடுகளை நிர்வஹித்த வழிகள் வெகு கடுமையாகவே இருந்ததென்று கண்டு பிடிக்கப் பட்டது. கமிட்டியார், கிராம ஜனங்களின் சௌகரியங்களை உயர்த்த வேண்டியதற்காக கிராமக் காடுகளின் சம்பந்தமாக காட்டிலாகா சிப்பந்திகளின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டுமென்று அபிப்பிராயம் சொன்னார்கள். கவர்மெண்டார் அவர்களின் அமைப்புகளின் படி 5 வகைகளாகப் பிரித்தார்கள். வகை I சீதோஷ்ண ஸ்திதியின் நிமித்தமாகவும், இயற்கை அமைப்பின் காரணமாகவும் கட்டாயமாய் வளர்க்கப்பட வேண்டிய காடுகள். வகைகள் II, III உயர்ந்த தச்சு வேலை, கட்டிட வேலை இவைகளுக்காகவும் மரங்களை நல்ல லாபத்தைக் கொடுக்கக் கூடிய விரகுகளையும் கொடுக்கக் கூடிய விருக்ஷங்களை வளர்க்க அடியிலிருந்து

19392

கள்; வகை IV கிராம ஜனங்களுக்கு சுள்ளி விறகு, மேய்ச்சல் இவைகளுக் உபயோகப்படக் கூடிய சில்லரைக் காடுகள்; வகை V மேய்ச்சலுக்கு மாத்திரம் உபயோகப்படக் கூடிய சில்லரைக் காடுகள். I, II வகைகள் பாரெஸ்டு இலாகாவின் நிர்வாஹத்திலேயே யிருக்க வேண்டு மென்றும, இக்காடுகளில் அதிக மேய்ச்சல் கூடாதென்றும், வகை III காடுகளை விட்டுவிட வேண்டுமென்றும், வகைகள் IV, V கிராம ஜனங்களின் விறகு சௌகரியம், மேய்ச்சல் சௌகரியம், முதலியவைகளுக்காகத் தனிப் படுத்தப் பட்டு ரக்ஷிக்கப்பட வேண்டு மென்றும் தீர்மனிக்கப் பட்டது. IV, V வகைகளின் நிர்வாஹ சம்பந்தமாகத்தான் பாரெஸ்டு இலாகாவின் சிப்பந்திகள் கிராம ஜனங்களுக்குக் கஷ்டங்களைக் கொடுத்து வந்தார்கள். ஆகவே, பாரெஸ்டு கமிட்டியார் இவ்வகைக் காடுகளின் நிர்வாஹ நிமித்தமாக கால்நடைச் சொந்தக்கார கிராமவாஸி அங்கத்தினர்களை யுடைய பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப்பட வேண்டு மென்று கவர்மெண்டாருக்கு யோசனை சொன்னார்கள். கவர்மெண்டார் மேற்குறித்த யோசனையை அங்கீகரிக்கையில் ரிஸர்வு பாரெஸ்டுகளிலுள்ள மேய்கால்களோடு, கிராமங்களிலுள்ள மேய்ச்சலுக்கு உபயோகப்படக் கூடிய அன் ரிஸர்வுகளும் கிராம ஜனங்களின் நிர்வாஹத்தில் அமைக்கப்பட வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

## II

1914 ஷுல் பாரெஸ்டுப் பஞ்சாயத்துகள் முதல் முதலாக பரீக்ஷார்த்தமாக ஏற்படுத்தப் பட்டன. ரெவினியூ டிபார்டுமெண்டாருக்குக் காடுகள் ஒப்புவிக்கப் பட்ட பொழுது அவைகள் சீர்கேடான நிலையில் இருந்தன. 1915 ஷுல் பாரெஸ்டு பஞ்சாயத்து ஏற்பாட்டைப் பல ஜில்லாக்களிலும் உண்டாக்குவதற்காக மிஸ்டர். ஏ. டேவிஸ், ஐ. ஸி. எஸ். பாரெஸ்டு கமிஷனருக்குப் பெர்ஸனல் அஸிஸ்டண்டாக நியமிக்கப் பட்டார். 1914-15ல் 76 பஞ்சாயத்துகள் வேலை செய்து கொண்டிருந்தன. அவைகள் கிருஷ்ணா, அநந்தபூர், நெல்லூர், செங்கல்பட்டு, கடப்பை, வடஆர்காடு, திருச்சினாப்பள்ளி, சேலம், கோயம்பத்தூர், ஆகிய 9 ஜில்லாக்களில் வேலை செய்தன. 36, 384 ஏகர்கள் மொத்த விஸ்தீரணமுள்ள 42 ரிசர்வுகள் அவைகளால் பரிபாலிக்கப் பட்டன. அக்காலத்திலேயே பாரெஸ்டு பஞ்சாயத்துகள் நன்றாய் வேலை செய்து வந்தன வென்று கலெக்டர்கள் மொழிந்தார்கள். 1914-15 வருஷாந்தரப் பிரகடனத்தில் ரெவினியூ போர்டார் பின்வருமாறு கூறினார்கள் :—

"ரெவினியூ டிபார்ட்மெண்டார் பாரெஸ்டுப் பஞ்சாயத்துகளைச் சரிவர மேற்பார்வை யிடவில்லை. டிஸ்டிரிக்ட் பாரெஸ்டு ஆபீஸர்கள் போய்ப் பார்[illegible] சீர்கேடுகள் ஒழுங்கு படுத்தப் படாமல் இருந்திருக்கின்றன. டிவிஷனல் ஆபீசர்களுக்கு வேலை அதிகமாக விருக்கிற தென்பதே அவர்கள் பஞ்சாயத்துக் காடுகளின் சம்பந்தமாய் அதிக கவனத்தைச் செலுத்தக் கூடுகிறதில்லை யென்பதற்குத் தக்க சமாதானமாகாது. டிவிஷனல் ஆபீசர்கள் பாரெஸ்டு பஞ்சாயத்து இயக்கத்தைப் பற்றிய விஷயங்களை நன்றாயறிந்து அனுபவம் அடைந்தால் அவர்களுக்கு பாரெஸ்டு பஞ்சாயத்து மேம்பார்வையில் கஷ்டமே ஏற்படாது.



1915-ம் வருஷத்தில் சேலம் ஜில்லாவில் பஞ்சாயத்து ஏற்பாட்டை உண்டாக்கும் பொழுது தெற்கு சேலம் டிவிஷன் பாரெஸ்டு கன்ஸர்வேடர் மொழிந்ததாவது :—

"பஞ்சாயத்துகளை நியமித்து கொஞ்ச காலம் வரையில் நிர்வஹிக்கும்படி செய்து பார்த்தால் அவைகள் சரிவர நிர்வாஹம் செய்யக் கூடியவைகளென்றே ஏற்படக் கூடும்." ரெவினியூ போர்டாரும் இவ்வபிப்பிராயத்தை யொப்புக் கொண்டார்கள்; மேலும் தனி பர்மிட்காரர்களைக் காட்டிலும் பஞ்சாயத்துகள் காட்டு ரக்ஷண பரிபாலன வழிகளில் திறமையாக வேலை செய்யக் கூடுமென்றும் அவர்கள் மொழிந்தார்கள். இவ்வேலைகளை நன்றாய்ச் செய்த பஞ்சாயத்துகளுக்கு வருஷக் கோடியில் மேய்ச்சல் கட்டணத்தில் ஒரு பாகத்தை வஜாச் செய்வதாகவும், அடுத்த வருஷக் கட்டணத்தைக் குறைப்பதாகவும் ஆலோஜித்தார்கள். கவர்மெண்டார் மேற்கூறிய யோஜனையை அங்கீகரிக்கவில்லை. ஆனபோதிலும், அவர்கள் பஞ்சாயத்துகள் அபிவிருத்தி வேலைகளைச் செய்திருந்தால் அஸ்ஸெஸ்மெண்டுகளில் அத்தொகைகளைத் தள்ளிக் கொடுக்கலாம் என்று உத்திரவிட்டார்கள். 1916-ம் ஷுல் கவர்மெண்டார் IV, V வகைக் காடுகளின் சம்பந்தமாக விதிகளையும் குத்தகைப் பத்திர ஷரத்துகளையும் ஏற்படுத்தினார்கள். அவைகளில் முக்கியமானவைகளாவன :—

"IV, V வகைக் காடுகளுக்கும், அன் ரிசர்வுகளுக்கும் பஞ்சாயத்துகள் ஏற்படுத்தப் படலாம்; கூடியான வரையில் சில்லரையான ஊற்பத்திகளை பஞ்சாயத்துகளே அடைந்து கொள்ளலாம்; போத்துகள் நடுகிற வழியிலும், கிணறு வெட்டுகிற வழியிலும், முள்ளுச் செடிகளை அழிக்கிற வழியிலும் பஞ்சாயத்துகள் டிவிஷனல் ஆபீசர்களுக்கு முன்னதாகவே தெரிவித்துக் கொண்டு அப்படிச் செய்யலாம்; மேற்கூறிய அபிவிருத்தி முயற்சிகளால் ஏற்படும் லாபங்களை பஞ்சாயத்துகளே அடையலாம்."

1919-ம் ஷுக் கோடியில் 326817 ஏகர்கள் மொத்த விஸ்தீரணம் பஞ்சாயத்துகளால் பரிபாலிக்கப் பட்டிருந்தது. பஞ்சாயத்துகளின் சங்கியை 353. ஆனபோதிலும், Vவது வகைக் காடுகளில் இன்னும் 5 லக்ஷம் ஏகர்கள் பஞ்சாயத்துகளில் அமைக்கப் படாமலிருந்தன. கவர்மெண்டார் பாரெஸ்டு பஞ்சாயத்து அபிவிருத்தி நிமித்தமாக பல யோஜனைகளைக் கைக் கொண்டார்

கள். பாரெஸ்டு பஞ்சாயத்து இயக்கமானது கூட்டுறவு இயக்கத்தை யொத்தது. கிராமங்களில் கால் நடைச் சொந்தக்காரர்களே பஞ்சாயத்தை நடத்திப் பஞ்சாயத்துக் காடுகளை உபயோகிக்கிறார்கள். பாரெஸ்டு பஞ்சாயத்துகள் கூட்டுறவு சங்கங்களைப் போன்றவைகள். ஆதலால், கூட்டுறவு சங்க ஏற்பாட்டு முறைகளே பாரெஸ்டு பஞ்சாயத்து நிர்மாண பரிபாலன வழிகளில் அநுஷ்டிக்கப் படலாமென்று கவர்மெண்டாரால் ஆலோசிக்கப் பட்டது. ஆகவே, ரெவின்யூ ஆபீஸர்களைப் போல் அதிகார புத்தியுடனில்லாதவர்களும், சங்கங்களுக்குப் போதனைகளையும் யோஜனைகளையும் அளித்து உதவி, ஒத்தாசைகளைச் செய்கிறதுமான கோ ஆபரேடிவ் உத்தியோகஸ்தர்களே பாரெஸ்டு பஞ்சாயத்து நிர்மாணம், நிர்வாஹ வேலைகளில் அமைக்கத் தொடங்கினார்கள். ஆனால், பிறகு எக்காரணத்தினாலோ மேற்குறித்த யோஜனை கைவிடப் பட்டது. கோ ஆபரேடிவ் இலாகாவின் நிர்வாஹத்தில் பாரெஸ்டு பஞ்சாயத்துகள் அமைக்கப் படாமலிருந்த போதிலும் அவைகள் கூட்டுறவு ஸ்தாபனங்களை யொத்தவைகளே தான். அவைகளை நிர்வாஹஞ் செய்கிற வழியிலும், மேம்பார்வை யிடுகிற வழியிலும் அதிகாரிகள் கூட்டுறவு இலாகாவின் ரிஜிஸ்திரார் சங்கங்களை எவ்விதமாக நடத்து வருகிறாரோ அது போலவே நடந்து வர வேண்டும். பாரெஸ்டு கமிட்டியாரும் மேற் கூறியவாறே அவர்களுடைய ரிபோர்ட்டின் 44வது பாராவில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது, "பஞ்சாயத்துகளை சுயேச்சையாய் பரிபாலனஞ் செய்யும்படி விட வேண்டும். அதிகாரிகள் அவைகளுக்குயாதொரு இடஞ்சல்களையும் கொடுக்கக் கூடாது. திருப்திகரமாகப் பஞ்சாயத்துகள் வேலை செய்து வரும் பொழுது அவைகளின் நிர்வாஹ ஒழுங்குகளின் அதிகாரிகள் நுழைந்து பார்க்கக் கூடாது."

## III

1920-ம் வருஷில் கவர்மெண்டார் பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் சம்பந்தமாக விசாரணை செய்து அபிவிருத்தி யோசனைகளைச் சொல்ல வேண்டிய நிமித்தம் மிஸ்டர் டி. ஜீ. பினெஸ், ஐ. ஸீ. எஸ் என்பவரை ஸ்பெஷல் டியூடிக்கு நியமித்தார்கள். மிஸ்டர் பினெஸ் விசாரணைகளை முடித்துத் தனக்கு ஏற்பட்ட யோசனைகளை சீப் கன்ஸர்வேடரின் துவாராவாக கவர்மெண்டுக்குத் தெரிவித்தார். அக்ரிமெண்டுகளில் கூறிய ஷரத்துகளின்படியே பஞ்சாயத்துகள் வேலை செய்ய முயன்றன வென்றும், சில பஞ்சாயத்துகள் வெகு திருப்திகரமாக வேலை செய்து வந்தன வென்றும், அவைகள் கிராம ஜனங்களின் நலத்தைக் கோறியே உழைத்தன வென்றும், கிராம சமூகங்கள் ஏகோபித்து உழைத்தன வென்றும் மிஸ்டர் பினெஸ் கூறினார். பஞ்சாயத்துகளும், கிராம ஜனங்களும் காடுகளைத் தங்களுடைய ஆஸ்தியாக பாவித்து அவைகளை அபிவிருத்தி செய்யத் தொடங்கின வென்றும், பஞ்சா



யத்துக் காடுகளை அதிகாரிகள் மேம்பார்வை யிட்டால் மாத்திரம் போதாது; அவர்கள் பஞ்சாயத்துகளுக்கு இஷ்ட மித்ரர்களாகவு மிருந்து கொண்டு அபிவிருத்தி யோசனைகளையும் ஒத்தாசையையும் செய்ய வேண்டு மென்றும் கூறினார். சீப் கன்ஸர்வேடர் அவர்களும் மிஸ்டர் பினெஸ் சொல்லிய விஷயங்களை ஒப்புக் கொண்டதோடு பஞ்சாயத்துக் காடுகளில் விருக்ஷங்களை நட்டுப் பயிர் செய்ய வேண்டிய ருசியானது கிராமத்தார்களுக்குப் புகட்ட வேண்டு மென்றும் சொன்னார். கிராமத்தார்கள் விருக்ஷங்களை நட்டு வந்தால் அவர்கள் தாங்கள் நட்டுப் பயிர் செய்கிற விருக்ஷங்களின் மேலும் அவைகளையுடைய காடுகளின் மேலும் ஆசையை வெளிப்பார்களென்றும் கூறினார். பஞ்சாயத்துகளிலிருந்து ஏற்படும் வரும்படியை அவைகளின் அபிவிருத்திக்காகவே செலவு செய்ய வேண்டு மென்றும் மொழிந்தார். பஞ்சாயத்துகளை மேம்பார்வை யிடுவதற்கு ஸ்பெஷல் ஆபீஸர் ஒருவரும் டிப்டி தாசில்தார்களும் நியமிக்கப்பட வேண்டு மென்றும், அவர்கள் தான் பஞ்சாயத்து நிர்மாணம், மேம்பார்வை முதலிய வேலைகளைச் செய்ய வேண்டு மென்றும் கூறினார். ரெவினியூ ஆபீஸர்களுக்கு அதிக வேலைகள் இருப்பதால் அவர்களுக்கு பாரெஸ்டு பஞ்சாயத்துகளைக் கவனிப்பதற்கு அவகாசமே யில்லை யென்றும், அவர்களைப் பஞ்சாயத்து வேலையிலிருந்து நீக்க வேண்டு மென்றும், ஆனால் ஸ்பெஷல் ஆபீஸர் அவர்களோடு கலந்து யோஜனைகளை அடைய வேண்டு மென்றும் சொன்னார். பஞ்சாயத்துக் காடுகளுக்கு ஜில்லாக்களில் கலெக்டரே முக்கிய அதிகாரியாக விருக்க வேண்டு மென்றும் அவருக்கு ஜில்லா பாரெஸ்டு ஆபீஸர் பஞ்சாயத்துக் காடுகளின் சம்பந்தமாக முக்கிய உதவி ஆபீஸராக விருக்க வேண்டு மென்றும், சீப் கன்ஸர்வேடர் மாஹாணத்துக்கே பாரெஸ்டு பஞ்சாயத்து இலாகாவின் தலைவராகவும் இருக்க வேண்டு மென்றும் அவர் அபிப்பிராயம் கூறினார்.

மேற் குறித்த பிரத்தியோக இலாகாவின் சம்பந்தமாக மேம்பார்வையை ரெவினியூ போர்டார் ஏற்றுக் கொள்ள சம்மதிக்க வில்லை; கவர்மெண்டாரோ மறுபடியும் பஞ்சாயத்துக் காடுகளை பாரெஸ்டு டிபார்டுமெண்டாரின் அதிகாரத்தில் வைக்க இஷ்டப்பட வில்லை. பஞ்சாயத்துக் காடுகள் ரெவினியூ உத்தியோகஸ்தர்களின் அதிகாரத்தில் இருந்தால் காடுகள் வர வர அழிக்கப் பட்டுப் போய் விடு மென்றும், அக்காரணத்தினால் கிராம ஜனங்களுக்கு வேண்டிய மேய்ச்சல் பூமி விஸ்தீரணம் குறைந்து போகு மென்றும், கிராம ஜனங்களுக்கு வேலியடைப்பதற்கு வேண்டிய முள் செடிகள் அற்றுப் போய் விடு மென்றும் கருதப் பட்டது. கிராமங்களில் ஜனங்கள் அவிவேகிகளாக விருப்பதும், கக்ஷிச் சண்டைகளிருப்பதும், அவர்களுக்கு உத்தியோகஸ்தர்கள் அனுதாபம் காட்டி புத்தி சொல்லாமலிருப்பதும்தான் பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் அபிவிருத்திக்கே இடையூறுகளாக வாய்ந்திருந்தனவாம். காட்டிலாகா சிப்பந்திகளுக்கு பாரெஸ்டு பஞ்சாயத்து விஷயங்களில் யா

தொரு சம்பந்தமு மில்லாமலிருந்தது; அவைகளை மேம்பார்வையிடுகிற ரெவினியூ உத்தியோகஸ்தர்களும் அவகாசமும் அபிருசியு மில்லாமையால் தக்கபடி பாரெஸ்டு பஞ்சாயத்துகளின் சம்பந்தமாக உழைக்கக் கூடவில்லை. ஆகவே, கவர்மெண்டார் கூட்டுறவு இலாகாவில் அனுபவம் வாய்ந்த ஒரு தகுந்த டிப்டி கலெக்டரை ஸ்பெஷல் ஆபீஸராக நியமித்து டிப்டி தாசில்தார் அந்தஸ்தில் இன்ஸ்பெக்டர்களை ஏற்படுத்த வேண்டு மென்று தீர்மானித்தார்கள். 1922-ம் வருஷத்தில் மேற்குறித்தபடி ஸ்பெஷல் ஆபீஸரும், டிப்டி தாசில்தார்களும் ஏற்படுத்தப் பட்டார்கள்.

## IV

பாரெஸ்டு இலாகாவின் நிர்வாஹத்திலிருந்து பஞ்சாயத்துக் காடுகள் பிரிக்கப் பட்டபடியால் கவர்மெண்டார் பாரெஸ்டு இலாகாவிற்காக அவர்கள் நடத்தும் சிப்பந்திச் செலவைக் குறைக்க வேண்டு மென்று ஆலோசித்து மிஸ்டர் ஆர். டீ. ரிச்சுமண்டை அது விஷயமாக ஸ்பெஷல் டியூடியில் நியமித்தார்கள். மிஸ்டர் ரிச்சுமண்டு மாஹாண கம்மிட்டியார் செய்த காட்டு வகுப்புக்களை ஒப்புக் கொள்ளவில்லை. காடுகளை (1) லாபத்தை உண்டு பண்ணுகிற வகை, (2) லாபத்தை உண்டு பண்ணாத வகை, (3) கிராமக் காடுகள் என்று மூன்று வகைகளாகப் பிரிக்க வேண்டுமென்றும், முதல் இரண்டு வகைகளும் பாரெஸ்டு டிபார்டுமெண்டாரின் அதிகாரத்திலேயே இருக்க வேண்டு மென்றும், மூன்றுவது ரெவினியூ இலாகாவிற்கு மாற்றப்பட வேண்டு மென்றும் கூறினர். கவர்மெண்டார் கன்ஸர்வேடர்களின் கான்பரன்ஸ் ஒன்றைக் கூட்டி, அவர்களோடு ஆலோசித்துக் காடுகளை (1) புரொவின்ஷியல் ரிமியூனரேடிவ் (மாஹாண கவர்மெண்டுக்கு லாபத்தைக் கொடுக்கக்கூடியவை) (2) புரொவின்ஷியல் அன்ரிமியூனரேடிவ், (லாபத்தைக் கொடுக்கக்கூடாதவை) (3) லோகல், அதாவது கிராமக் காடுகள் என்று மூன்று வகைகளாகப் பிறிக்க வேண்டுமென்று தீர்மானித்து மிஸ்டர் டி. ஏ. வொயிட்ஹெடை அவ்வேலைக்கு நியமித்தார்கள். அவர் மூன்று ஜாப்தாக்களைத் தயார் செய்தார்:—(1) பாரெஸ்டு டிபார்டுமெண்டின் அதிகாரத்திலேயே எப்பொழுதும் இருக்க வேண்டிய காடுகள்; (2) பஞ்சாயத்துகள் காடுகளை நன்றாய்ப் பரிபாலிக்கிற வரையில் பாரெஸ்டு டிபார்டுமெண்டார் வைத்துக் கொள்ள வேண்டிய காடுகள்; (3) பாரெஸ்டு டிபார்டுமெண்டிலிருந்து உடனே பிறிக்கப்படக் கூடிய காடுகள். பாரெஸ்டு பஞ்சாயத்துகள் திருப்திகரமாய் வேலை செய்வதாகவே ஏற்பட்டிருக்கிறபடியால் இரண்டாவது வகைக் காடுகளை நிறுத்தி வைக்க வேண்டியது அநாவசியமென்று கவர்மெண்டார் அபிப்பிராயப் பட்டார்கள். கஞ்சம், நீலகிரி, மலபார், தென்கன்னடம், தஞ்சாவூர், இராமநாதபுரம், சென்னைப்பட்டணம் முதலிய ஜில்லாக்கள் தவிர மற்ற எல்லா ஜில்லாக்களிலும் காடுகள் மேற்கூறியபடியே பிறிக்கப்பட்டு ஜாப்தாக்கள் ஜில்லா கஜட்டுகளில் பிரஸுரிக்கப்பட வேண்டுமென்றும், ஒவ்வொரு ஜில்லாவிலும் கம்மிட்டிகள்



ஏற்படுத்தப்பட்டு அவைகள் மேற்கூறிய ஜாப்தாக்களை பரிசோதிக்க வேண்டு மென்றும் உத்திரவிட்டார்கள். ஜில்லாக் கம்மிட்டிகள் ஏற்படுத்தப் பட்டு வேலை செய்தன. ஆனால் அவர்களுடைய ரிபோர்டுகள் நமக்குக் கிடைக்க வில்லை. கவர்மெண்டார் இரண்டாவது வகைக் காடுகளை உடனே பஞ்சாயத்துகளுக்கு ஒப்பிவிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்வோம்.

## V

மேற்கூறியபடி பஞ்சாயத்துகள் சீப்கன்ஸர்வேடரின் அதிகாரத்திற்குள் அமைக்கப் பட்டிருக்கையில் அவைகளைச் சீப்கன்ஸர்வேடரும், மற்ற கன்ஸர்வேடர்களும் சரிவர கவனிக்கக்கூடவில்லை பாரெஸ்டு டிபார்டுமெண்டு வேலைகளே அவர்களுக்கு அதிகமாக விருந்தன. ஆகவே கவர்மெண்டார் பாரெஸ்டு பஞ்சாயத்து நிர்வாஹ வேலையை ரெவினியூ போர்டாருக்கு மாற்றினார்கள். 1925-ம் ஸுல் ஜூலை மாதத்திலிருந்து ரெவினியூ போர்டார் பாரெஸ்டுப் பஞ்சாயத்து நிர்வாஹத்தை வஹித்து வருகிறார்கள். ஸ்பெஷல் ஆபீஸர் ரெவினியூ போர்டின் கீழ் அதன் ஆபீஸிலேயே வேலை செய்து வந்தார். ஜில்லாக் கலெக்டர்களுக்கு பாரெஸ்டு பஞ்சாயத்து வேலையில் முக்கிய உதவி உத்தியோகஸ்தராகவு மிருந்து வந்தார். பஞ்சாயத்து இன்ஸ்பெக்டர்களுக்கு டிப்டி தாசில்தார்களென்ற பெயர் கொடுக்கப் பட்டது. அவர்கள் ஜில்லாக்களில் கலெக்டர்களின் கீழ் வேலை செய்து வந்தார்கள். ரெவினியூ டிவிஷனல் ஆபீசர்கள் பஞ்சாயத்துக் காடுகளை மேம்பார்வை செய்து ரிபோர்டுகளை மாத்திரம் அனுப்ப வேண்டியதாக விருந்தது.

1928-ம் ஸுலில் கவர்மெண்டார் பாரெஸ்டுப் பஞ்சாயத்து நிர்வாஹ வேலையை கலெக்டர்களுக்கு மாற்றினார்கள். பஞ்சாயத்து இயக்கம் நன்றாய் ஓங்கியிருப்பதால் இனி அவைகளின் நிமித்தம் ஸ்பெஷல் ஆபீசர் ஒருவர் தேவையில்லை யென்று கவர்மெண்டார் அபிப்பிராயம் கொண்டபடியால் அவர்கள் பஞ்சாயத்து நிர்வாஹ வேலையை கலெக்டர்களுக்கு மாற்றினார்கள். பஞ்சாயத்து டிப்டி தாசில்தார்கள் முன் போல் பஞ்சாயத்துகளை மேம்பார்வை செய்து அவைகளின் கணக்குகளை பரிசீலனை செய்ய வேண்டு மென்றும் உத்திரவாயிற்று. ஸ்பெஷல் ஆபீசருக்குப் பதிலாக ரெவினியூ டிவிஷனல் ஆபீசர்கள் பஞ்சாயத்துகளை மேம்பார்வையிட்டு டிப்டி தாசில்தார்களுடைய வேலைகளைத் தணிக்கை செய்ய வேண்டு மென்றும் விதிக்கப் பட்டது. ஸ்பெஷல் ஆபீஸர் ஸ்தானம் 2 வருஷ மிருக்க வேண்டு மென்றும், ஸ்பெஷல் ஆபீசர் பஞ்சாயத்து நிர்மாண வேலையைப் பூர்த்தி செய்ய வேண்டு மென்றும், கலெக்டர்களுக்கு பஞ்சாயத்து வேலையில் உதவி புரிய வேண்டு மென்றும், பஞ்சாயத்து நிர்வாஹ வேலையை நடத்தும் போர்டு மெம்பருக்கு முக்கிய உதவி உத்தியோகஸ்தராக விருக்க வேண்டு மென்றும் விதிக்கப் பட்டது பஞ்சாயத்துகளை நிர்மாணம் செய்கிற காலத்தில் ஒரு ஸ்பெஷல் ஆபீசர்

இருக்க வேண்டியது அவசியமாயிருந்தால், அவைகள் நிர்மாணமான பின்பு அவைகளைச் சரியான வழியில் நிலை நிறுத்தி வழி காட்டுவதற்கு அவ்வாபீசர் இருக்க வேண்டியது அவசியமில்லையா? கவர்மெண்டு ஸ்பெஷல் ஆபீசரைக் காயமாக நியமித்து முன்போல் எப்போதைக்கும் அவரையே பஞ்சாயத்து நிர்வாஹப் பாதுகாப்பு வேலைகளை நடத்தும் படிச் செய்ய வேண்டும்.

(இன்னும் வரும்.)

## நமது உணவு.

(38-வது பக்கத்திலிருந்து தொடர்ச்சி.)

### உலோக உப்புக்கள்.

சரீரக் கட்டிட வேலைக்கு ஊன் பதார்த்தங்களுக்கு அடுத்தபடியாக வேண்டியவை உலோக உப்புகள் (mineral salts). சுண்ணாம்பு (lime), தீப்பாஷாணப் பொருள்கள் (phosphates), கந்தகம் (sulphur), சாதாரண உப்பு முதலியவைகளுக்குத்தான் உலோக உப்புகள் என்ற பெயர் வழங்குகிறது. சரீரத்தின் மொத்த கனத்தில் உலோக உபபுகள் 25-ல் ஒரு பாகமாக அமைகின்றன. உலோக உப்புகளை அதிகமாக உடைத்தாயிருக்கப் பட்டவை எலும்புகளும், பற்களும். அவை தசைகளிலும, இரத்தத்திலும், சரீர திராவகங்களிலும் கூட சிறிது அளவில் இருக்கின்றன. அவைகள் இரத்தம் புளித்துக் கெட்டுப் போகாமலிருக்கும்படி பார்த்துக் கொள்கின்றன. இரத்தம் கொஞ்சம் புளித்துப் போனால் கூட நமக்கு நோயுண்டாகும். அது அதிகமாய்ப் புளித்துப் போனால் மரணம் நேரிடும். உலோக உப்புக்கள் நம்முடைய உணவில் தக்கபடி சேர்க்கப் பட்டிருந்தால் இரத்தம் கெட்டுப் போகாது. அதிகப் புளிப்பு இரத்தத்தில் ஏற்படுவதும தடுக்கப் படும். உலோக உப்புக்கள் தசைகளைச் சரியாய் வேலை செய்யும்படி செய்கின்றன. அவைகள் ஹிருதயத்தைத் துடித்துத் துடித்து இரத்ததைச் சரீர பாகங்களுக்குப் பாயும்படிச் செய்து பிறகு அதை சுவாஸ கோசத்தை அடையும் படிச் செய்கின்றன. உலோக உப்புக்கள் இல்லா விட்டால் சரீர பாகங்களிலும் தசைகளிலும நீரிறுது, மூத்திர கோசங்கள் சரியாய் வேலை செய்ய முடியாது, சரீரத்திலிருந்து விஷ வஸ்துக்கள் வெளியே தள்ளப்பட மாட்டா, இரைப்பையும், ஜீரண கருவிகளும், ஜீரணத்திற்கு வேண்டிய திராவகங்களை உண்டாக்க மாட்டா. நமது உணவுகளில் உலோக உப்புகள் சரியானபடி நிறைந்திருந்தாலொழிய நமது சரீர ஆரோக்கியம் தக்கபடியிராது.

உலோக உப்புக்களை உண்டாக்குகிற பொருள்கள் இருபது. இவைகள் நமது சரீரத்திலிருக்கின்றன. இவைகளின் சேர்க்கையால்தான் உலோக உப்புக்கள் உண்டாகின்றன. மேற் கூறிய பொருள்களில் முக்கியமானவை கால்ஷியம், பொடாஸ்ஸியம், ஸோடியம், இரும்பு, மாகனீஷியம், மாங்கனீஸ்,



தாத்திரகம், செம்பு, பிதியம், பேரியம், தீப்பாஷாணம் (phospherous), கந்தகம், குளோரின், அயடின், ஸிலிகான், புளோரின். முதல் பத்துப் பொருள்களும் ஆல்கலியை உண்டாக்குகிற பொருள்கள். கடைசி ஆறு ஆஸிடை உண்டாக்குகிற பொருள்கள். ஆல்கலியை உண்டாக்குகிற பொருள்களில் வெகு முக்கியமானவை கால்ஷியம், பொடோஸ்ஸியம், ஸோடியம், இரும்பு மாக்னீஷியம். இவைகள்தான் சரீரத்தில் அதிக அளவுகளில் இருக்கின்றன. மீதி ஐந்தும் வெகு குறைவான அளவுகளில் இருக்கின்றன. ஆஸிடை உண்டாக்குகிற பொருள்களில் தீப்பாஷணமும் (phosphorus), கந்தகமும், குளோரினும் முக்கியமானவை. ஆல்கலியை உண்டாக்குகிற பொருள்களும், ஆஸிடை உண்டாக்குகிற பொருள்களும் சரியான அளவுகளில் அமைந்தால்தான் இரத்தம், சரீர திராவகங்கள், சரீர பாகங்கள் முதலிய இவைகள் அதிக ஆல்கலியாயில்லாமலும, அதிக ஆஸிடாயில்லாமலும் சரியானபடி யிருக்கும்.

மேற் கூறிய 20 உலோக உப்புப் பொருள்கள் உணவுகளில் தக்கபடி அமைந்திருந்தாலொழிய அவைகள் சரியான உணவுகளாகா. பாலைத் தவிர வேறெந்த உணவிலும் மேற் கூறிய பொருள்கள் எல்லாம் சேர்ந்திருக்கவில்லை. பாலிலும் இரும்பு குறைவாக விருக்கிறது.

பச்சைக் கீரைகள், வெங்காயம் போன்ற பாகங்கள், கிழங்குகள், பழங்கள் முதலியவைகளில் ஆல்கலியை உண்டாக்கும் பொருள்கள் நிறைந்திருக்கின்றன. மாம்ஸம், பருப்பு கொட்டைகள், தான்யங்கள் முதலியவைகளில் ஆஸிடை உண்டாக்கும் பொருள்கள் அதிகமாக விருக்கின்றன. செடிகளின் பச்சை இலைகளில்தான் கொட்டை, பருப்பு முதலியவைகளில் காட்டிலும் அதிக உலோக உப்புக்கள் இருக்கின்றன. ஆகவே, நமது உணவுகளில் நாம் அரிசி, கோதுமை, கேழ்வரகு, முதலிய தான்யங்களையாவது, மாம்ஸங்களையாவது அதிகமாக உபயோகித்தால் நாம் அதிகமான அளவுகளில் கீரைகளையும் அவைகளோடு உபயோகிக்க வேண்டும்.

தான்யங்களில் உலோக உப்புக்கள் மேல் தோலோடு சம்பந்தப் பட்டிருப்பதால், நாம் அவைகளை மில்களில் அரைத்தால் அவைகள் போய் விடுகின்றன. வைடமின்களும் இது போலவே போய் விடுகின்றன. புரோடீன்களும் போய் விடுகின்றன. உணவுகளில் வைடமின்கள் சரியாயமைந்திருந்தால் அவைகளில் மேற் கூறிய இதர பொருள்களும் இருக்கும். மில்களில் அரைத்த அரிசி, மாவு முதலியவைகளில் வைடமின்களுமிரா, புரோடீன்கள், உலோக உப்புக்களுமிரா; பற்களும், எலும்புகளும் பலஹீனமாய்ப் போய் விடும். மூத்திரகோசம், சுவாச கோசம், ஹிருதயம் முதலியவைகளும் சரியாய் வேலை செய்யா.

நமக்கு ஜுரம் வரும் பொழுது இரத்தம் ஆஸிடாகப் போகிறது. அதை

வது புளித்துப் போகிறது. ஆகவே அப்பொழுது அதிகமாக நீரைக் குடிக்க வேண்டும். பழங்கள், பழரஸங்கள் முதலியவைகளை அதிகமாக உபயோகிக்க வேண்டும். தான்யங்கள், மாம்ஸம், கொழம்பு முதலியவைகள் ஆஸிடை உண்டு பண்ணக் கூடியவைகளாதலால் அவைகளை உபயோகிக்கக் கூடாது.

நம்முடைய உணவுகள், பால், வெண்ணை, நெய், மோர், தயிர், தான்யங்கள் முதலியவைகளைப் பிரதானமாகக் கொண்டிருந்தால், நாம் அதிக அளவுகளில் பச்சைக் கீரைகளையும், பழங்களையும், காய்களையும் புசிக்க வேண்டும். அப்படி நாம் சாப்பிடுவோமாகில் நமது உணவுகளில் தேவையான உலோக உப்புக்கள் நிறைந்திருக்கும். நமது உணவுகளில் தான்யங்களும், மாம்ஸமும், முட்டையும், கொட்டைகளும், வேக வைத்த காய்களும் பிரதானமாகவிருந்து அவைகளில் கொஞ்ச அளவில் பாலும், பழமும், கீரையும் இருந்தால் நமது சரீரத்தில் இரத்தமும், திராவகங்களும் ஆஸிடாகி சரீர ஆரோக்கியத்தையும் வளர்ச்சியையும் தடுக்கும்.

# இந்தியருக்கு ஆரோக்கியமான உடை யாது?

'மனிதர்களுக்கு ஆரோக்கியமான உடை' என்னும் தலைப்பு கொண்ட ஒரு இனிய வியாசம் ஒன்று இதில் பின்னால் வரையப் பட்டிருப்பதை நமது வாசகர்களுக்கு அறிவிக்கிறோம். இவ்வியாசமே இம்மாதத்திய மேற்சொல்லிய பத்திராதிபர் உரைக்கும் காரணமாக நிற்கின்றது. இந்தியருக்கு ஆரோக்கியமான உடையாது? என்பதைக் குறித்து நாம் இங்கு எடுத்துரைப்போம். எம்மாதிரி உடை தரிக்க வேண்டியது, எப்படி, யார் யார் தரிக்க வேண்டியது என்பதைக் குறித்து பின் வரும் விதிகள் மனுதர்ம சாஸ்திரத்தில் நியமிக்கப் பட்டிருக்கின்றன:—

பிரம்மசாரிகள். (அதாவது மாணவர்களுக்கு)

1. மாணவர்கள், கோவிராம்ரியா, மான் தோல், அல்லது வெள்ளாட்டுத் தோல் இவற்றை மேலாடையாகத் தரிக்க வேண்டும். உள் ஆடைக்கு, சணல் நார், க்ஷௌமா, அல்லது கம்பளம் இவற்றை ஜாதி முறைப்படி தரிக்க வேண்டும்." (மனு ii. 41).

2. வேதாத்தியயனம் பண்ணும் போது, அவன் வாயை செவ்வையாய் கொப்புளித்து, சாஸ்திர விதிப்படி வடக்கு முகமாய் உட்கார்ந்து கொண்டு, வேதங்களைப் பூஜித்து, லேசான உடையைத் தரித்து, திரிகரண சுத்தியாய் அத்தியாயனம் செய்ய ஆரம்பிக்க வேண்டும்." (மனு ii. 70).

கிரகஸ்தர்களுக்கு. (அல்லது விவாகமானவர்களுக்கு)

3. குருவினுடைய ஆஸ்ரமத்திலிருந்து வீட்டுக்கு திரும்பி வந்த ஒரு திட பிராமணன் எக்காரணத்தினாலாகிலும் பட்டினி கிடக்கக் கூடாது.



சொத்து இருக்கும் பக்ஷத்தில், அழுக்கடைந்த கந்தத் துணிகளை உடுக்கக் கூடாது. (மனு iii. 34).

4. ஒருவன் ஒற்றைத் துணியை உடுத்திக் கொண்டு உண்ணக் கூடாது. அம்மணமாய் தண்ணீரில் முழுகக் கூடாது. ஒரு பாட்டையிலாவது, சாம்பல் மேலாவது, தொழுவத்திலாவது சிறுநீர் விடக் கூடாது." (மனு iv. 45).

5. " அஸ்தமித்த பிறகு, எள்ளுடன் கலந்த ஆகாரத்தை உண்ணக் கூடாது. அம்மணமாய் படுத்துறங்கக் கூடாது. வாயில் சோற்றை வைத்துக் கொண்டு வெளியே புறப்படக் கூடாது. (மனு iv. 75).

சன்னியாசிகளுக்கு.

6. தோல் அல்லது மரவுரியைத் தரிக்க வேண்டும். தினம் காலையிலும் மாலையிலும் ஸ்நானஞ் செய்ய வேண்டும். நீண்ட தலை மயிர், தாடி, நகங்கள் இவைகளை வளர்க்க வேண்டும் (மனு vi. 6).

7. கலவோடு, மரத்தின் வேர்கள், சாதாரண துணிகள், எல்லாரிடத்திலும் விஸ்வாஸம், கர்ம நெறி இவையாவும் முக்தி யடைந்த சன்னியாசிகளுக்கு அடையாளம் (மனு vi. 114).

துணிகளைத் தோய்த்துக் கட்டும் விஷயத்தைப் பற்றி.

8. ஒரு வண்ணான் துணிகளை, சால்மலி மரத்தினால் செய்த சமமான பலகையின் மேல் தோய்த்து, ஒருவர் துணிகளை மற்றொருவர் துணிகளுடன் கலக்காமலும் இருப்பதுடன், ஒருவர் துணிகளை மற்றொருவர் உடுக்கும் படிக்கும் விடக் கூடாது. (மனு vii. 396).

மேற் சொல்லியவைகளை ஜாக்கிரதையாய் ஆராய்ச்சி செய்து பார்த்தால் புராதன இந்தியரின் உடையானது ஆரோக்கியமுள்ளதாயும், சுகாதார விஷயத்தை அனுசரித்தும் இருந்ததாகத் தெரிய வருகிறது. மாணவன், ருதுக்களுக்குத் தக்கபடி கம்பளம், சணல் நார், பஞ்சு, பட்டு முதலியவற்றால் செய்த ஒரே வஸ்திரத்தை உடுக்க வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. அந்த வஸ்திரமும் மிக லேசானதும் இடுப்பின் மேல் தரிக்கப் படுவதாகவுமிருக்க வேண்டும். மகாத்மாஜி அவர்கள் இப்போது இடுப்பின் மேல் தரித்துக் கொண்டிருக்கிற உடையானது பண்டைக் காலத்து மாணவன் தரித்துக் கொண்டிருந்த உடையின் மாதிரி என்னலாம். அவன் தன் நிருவாணத்தை மறைக்கவும், தன் தேகத்தின் மற்றப் பாகத்தை சூரிய வெளிச்சத்திற்கும், காற்றுக்கும் திறந்து காட்டி, குளிர், மழை, பனி, முதலியவற்றைச் சஹித்துக் கொள்ளும்படி அவனைச் செய்வதற்காகவே இவ்வுடை ஏற்படுத்தப் பட்டிருந்தது. இதனால் அம்மாணவன் மனோபலமும், தேக பலமும் அடைந்தவனாகி, பின்னிட்டு, சூரிய வெப்பம், காற்று மழை, மழை, காற்று முதலியவற்றைத் தைரியமாய் சஹித்துக் கொள்ளவும், ஜலதோஷம், இருமல் முதலி

யவை அவனை அணுகாமலும், உஷ்ண இடி, சூரிய இடி, முதலியன அவனை பயமுறுத்தாமல் இருக்கும்படியும் ஆகி விடுகிறான். கம்பளம் அவனுக்கு மேல் போர்வையாய் சிபார்சு செய்யப் பட்டிருந்தது. ஏனெனில் சதாகாலமும் காடுகளில், வெட்ட வெளியில் வாசம் செய்ய வேண்டியிருந்ததினால், அவனுக்கு அது அவசியமாக விருந்தது.

கிரஹஸ்தனுக்கு; அதாவது கல்யாணமானவனுக்கு, இரண்டு வஸ்திரங்கள் உண்டு. இரண்டாவது வஸ்திரமில்லாமல் தினம் அவன் போஜனம் உண்ணக் கூடாது. அழுக்கடைந்த வஸ்திரங்களையும், கந்தல்களையும் அவன் உடுக்கக் கூடாது. பூலோக இச்சையையும், பூலோக சுகங்களையும், வெறுத்துக் கைவிட்ட சன்னியாசிக்கோ, சாதாரண உடை போதுமானது. அவ்வுடையில் தோலும் மர்வுரியும் சேர்ந்தவை. உடைகளை எப்போதும் தோய்த்து உடுக்க வேண்டும். தொத்து வியாதிக்குப் பயந்து உடைகளை மாற்றப் படாதென்று நியமனம் செய்யப் பட்டிருக்கிறது. உஷ்ண தேசமாகிய நமது இந்தியாவில் வருஷத்தில் சுமார் ஆறுமாதகாலம் ஒரு மானிட தேகத்தின் வெயர்வைக் கோளங்கள் அதிக சுறுசுறுப்பாய் வேலை செய்கின்றன. அவன் துணிகள் யாவும் வெயர்வையில் நனைந்து, காற்றடிக்கும் போது, தூம்பும் தூசியும் அதன் மேல் படிவதால் அதிக அழுக்கடைந்து போகின்றன. தினம் அத்துணிகளைத் தோய்த்து வெய்யிலில் உலர்த்தித் தரித்தாலொழிய நானாவிதமான விஷக்கிருமிகள் அவற்றின் மேல் நிர்ப்பயமாய் வந்து தங்கி, சாஸ்விதமாய் அங்கே குடி கொண்டிருப்பதற்கு ஹேதுவாயிருக்கும். ஸ்திரீகள் லேசானதும், வெளுத்ததும், தளர்த்தியுமான உடையை உடுத்து வந்தனர். வெள்ளை நிறத்திற்கு உஷ்ணத்தை பிரதி பலிக்கச் செய்யும் சக்தியுண்டு. ஆனது பற்றியே கல்விக்கு அதிதேவதையாகிய சரஸ்வதியும், வெள்ளைக் கலையுடுத்து, வெள்ளைப் பணிபூண்டு வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பதாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. கழுத்துப்பட்டை, கழுத்தைச் சுற்றி இருக்கக்கட்டிய நாடா முதலிய தற்காலத்தில் காணப்படும் நாஸுக்கான உடை அக்காலத்தில் இருந்ததாகத் தென்படவில்லை.

இக்காலத்து இந்தியன், உடை விஷயமாக எவ்வளவு மட்டும் சீரழிந்து போயிருக்கிறானென்பதை இங்கு கவனிப்போம். மேனாட்டாருடைய உடையைப் போல் தானும் தரிக்க ஆரம்பித்து பாதாதிகேசம் வரையில் உடை உடுக்க ஆரம்பித்து விட்டனன். சாதாரணமான நிறமற்ற வெள்ளைத் தலைப் பாகைக்குப் பிரதியாக குல்லாயும் டொப்பியும் தின மாத்திரமும் வருஷக் கணக்காய் போட ஆரம்பித்து விட்டனன். எப்போதாகிலும் சற்று டொப்பியை காற்று புக வேண்டி எடுக்கும் போது அதைப் பார்த்தால் முத்து முத்தாய் அதில் வெயர்வை படிந்திருக்கும்: பார்க்கவும் அவலக்ஷணமாயிருக்கும். உடலுக்கு மேல் உள்சட்டை, மார்புச்சட்டை, அதற்கு மேல் ஒரு சட்டை



ஆகிய மூன்று அடுக்கு உடை தரிக்கப் படுகிறது. போதாக்குறைக்கு, தொண்டையைப் பிடிக்க, இறுகக் கட்டிய கழுத்துப் பட்டையும், கழுத்துக் கட்டும் போட்டுக் கொள்ளப் படுகின்றன. கால்களை முழுதிலும் மறைக்க, நிஜார்கள், மேஜோடுகள், பூட்ஸுகள் இருக்கின்றன. இவற்றை பெயரவொட்டாமல் கெட்டியாய் பிடித்துக் கொள்ள, பட்டைகளும், கட்டுகளும், பெல்டுகளும் அணியப் படுகின்றன. இந்த உடை நிச்சயமாய் மேனாட்டார் உடையைத் தோற்கடிக்கும் என்றே சொல்ல வேண்டும். இந்திய ஸ்திரீகளைக் கவனிப்போம். அவர்கள் பூர்வாசார அபிமானத்திலும், படிப்பில்லாமையினாலும், பழைய உடையையே இன்னமும் உடுத்திக் கொண்டு வருகின்றனர். ஆனால் இங்கிலீஷ் பாஷை கற்றுக் கொண்ட ஸ்திரீயோ மேனாட்டு ஸ்திரீயின் நடை உடை பாவனைகளை அனுசரிக்க ஆரம்பித்து விட்டனள். மேனாட்டு ஸ்திரீயின் உடை பத்து வருஷ காலமாக முழுதிலும் மாறுதல் அடையப் பட்டு வருகிறது. முன்னிருந்த இறுகக் கட்டிய அளவுக்கு மிஞ்சிய உடை யாவும் போய் லேசானதும் போதாதுமான உடையைத் தரித்துக் கொண்டு வருகிறார்கள். ஆரோக்கிய விஷயமாகப் பார்த்தால், இவ்வுடைக்கு யாதொரு குற்றமும் சொல்ல முடியாது. ஆனால் நாணத்திற்கு முரண்பாடாக விருக்கிறது. இந்திய ஸ்திரீ தற்போது தரிக்கும் உடையாகிய, கழுத்தை மூடாமல் திறந்து வைத்து தைக்கப் பட்டிருக்கும் ரவிக்கை, கால் முழுதிலும் மறைக்கும், பட்டினாலோ பருத்தியினாலோ [illegible] லேசான புடவை ஆகியவைகளே உத்கிருஷ்டமான [illegible]னலாம். பார்வைக்கு லக்ஷணமாயும் அடக்கமாயும், சுகாதார முறை[illegible] அனுசரித்தும் இருக்கின்றன. இந்திய ஆண் மகனுக்கோ, அரைக்கு ஒரு [illegible]ணி மேலுக்கு பட்டும் படாதுமாய் அணிந்து கொள்ள ஒரு அங்கவஸ்திர[illegible]மானவை. [illegible]மானால் நவீன நாகரீகத்திற்கு அனுசரணையாக ஒரு வெள்ளைத் தலைப்பாகை தளர்ச்சியான ஒரு உட்சட்டை இவை தரிக்கலாம். பாதங்கள் அழுக்கடையாமலும் தொத்து வியாதிக் கிருமிகள் அவற்றில் ஒட்டிக் கொள்ளாமலும், வேறு காயம் முதலியன படாமலும் இருக்கும் பொருட்டு, பாதங்களுக்கு பாதரக்ஷை அல்லது பாதக்குறடு இவைகளைத் தரிக்க வேண்டும். நமது தேசத்து சீதோஷ்ண ஸ்திதிக்கும் இவைதாம் ஏற்றவை. ஸ்திரீகளும் தங்கள் பாதங்களைப் பாதுகாக்க வேண்டி பாதரக்ஷை அணிய வேண்டும். இது நமது தேசத்தில் இதுகாறும் வழக்கமில்லை. பூட்ஸு, பாதரக்ஷை ஆகிய இவற்றின் விஷயமாய் 'லான்ஸெட்' என்னும் பத்திரிகையில், 1929ஞு ஜுன் மீ 15உ—1: 1, இதழில் சொல்லப் பட்டிருப்பதை நமது வாசகர்களின் நன்மைக்காக ஈங்கெடுத் துரைப்போம்: நாகரீகத்தினால் ஏற்பட்ட அநேகவித பிரதிகூலங்களில், மனிதனுடைய பாதம் பாதரக்ஷை போட்டுக் கொள்வதனால், கெட்டுப் போயிருப்பது ஒன்றாகும். பூட்ஸுகள், பாதரக்ஷைகள் மேஜோடுகள் இவை தரிப்பதினால் நேரிடும் கெடுதல்களைக் குறி


த்து அநேக கிருந்தகர்த்தாக்கள் வேண்டிய அளவு எழுதியிருக்கிறார்கள் பாதத்தை மறைப்பதற்கு எது சரியான மாதிரி, எது சரியான வஸ்து என்பதைக் குறித்தும் அநேக வியாசங்கள் எழுதப் பட்டிருக்கின்றன. * * * பூட்ஸுகள், செருப்புகள் இவைகளின் சரித்திரத்தைப் படித்தும் நமது பத்திரிகையில் 1914-ம் ஆண்டில் மிஸ்டர் மியூர்ஹெட்லிடில் என்பவர் எழுதிய வியாஸத்தில் சொல்லியிருக்கிறபடி, பூலோகத்தில் ஜனங்கள் எவ்விதமான பாதரக்ஷைகளை தற்காலம் உபயோகிக்கிறார்கள் என்பதைக் கவனித்துப் பார்த்தால், பாதக்குறடுகள் தவிர மற்ற எந்தவித பாதரக்ஷையும் கால் கட்டை விரலை நிலைவிட்டுப் பெயரும்படி செய்வதற்கு ஹேதுவாகும். வர வர அவ்விரலின் எலும்புகளுக்கு, சுதாவாய் ஏற்பட்டுள்ள பின்னுக்கு இழுத்துக் கொள்ளும்படியான சக்தி அடியோடே அற்றுப்போகும்படி நேரிடும். கிரேக்கர், ரோமாபுரியார், அணிந்திருந்த பாதக் குறட்டுக்கு, பெருவிரலுக்கும், இரண்டாவது விரலுக்கும் மத்தியில் கயிறு ஒன்று இருப்பதால் அவ்வித கெடுதல் இல்லை. இந்தியாவிலும் இன்னும் இதர இடங்களிலும் தற்காலத்தில் அணியப்படும் சில பாதக்குறடுகளுக்கும் இம்மாதிரியாகவே கெடுதலில்லை.— * * * *."

[ஆரோக்கிய தீபிகை.]

199392

# மேயர்ஸ் பம்புகள்.

உலகப் பிரசித்தி பெற்றவை.



எவ்வளவு ஆழத்திலும் சுலபமாக

வேலை செய்யக் கூடிய கை பம்புகளும்,

நிலம் பாய்ச்சவும், அதிக தண்ணீர் ஸப்ளை

செய்யவும் கூடிய பெரிய பம்புகளும்,

ஜலம் தெளிக்கக் கூடிய பம்புகளும்,

சுலபமாக எடுத்துக் கொண்டு போகக் கூடிய

பம்புகளும்

நம்மிடம் கிடைக்கும்.

## லிமாயீ பிரதர்ஸ் லிமிடெட்,

1-173 பிராட்வே: தபால் பெட்டி 202: மதராஸ்.

Regd. No. M. [illegible]. MARCH-APRIL, 1930. Vol. V—3-4.


# அம்ருதாஞ்சனம்

என்றாலென்ன?

தலை நோய், பக்க நோய், கீல் நோய்,

கன்ன நோய், கழுத்து நோய், ஒற்றைத்தலை நோய்,

வாய்வு நோய், முதுகு நோய், பல் நோய், முசுக்கை,

சுளுக்கு, காயம், தேள், பூரான்,

பக்ஷவாதம், மைக்ரம்,

சளுப்பு, மார்சளி,

உப்பசம், மார் ஏச்சு,




கழுத்து சளி, ரத்தம் விழுதல்,

சந்திவாய்வு, சீழ் விழுதல்,

சுண்டு, பேன், முகப்பருவு, வீக்கம்,

நோய், செகப்பு, தத்துக்கள், படை,

சிறங்கு, தெனவு, எரிச்சல், இது

அது என்று சொல்வதேன் ?

எல்லா நோய்களையும்,

பாதைகளையும்,

போக்கும் ! போக்கும் !! போக்கும் !!

மூன்று விசைகளிலும் போக்கும்.

## அமிர்தாஞ்சனம் டிபோ

பம்பாய் & மதராஸ்.


Published by Mr.A. Rajagopala Reddi, President, Forest Panchayatdars' Union Ltd, Madras, & Printed At The Magazine Press, Chingleput.